# வடக்கு மாகாண பொதுச்சேவையில் அலுவலக பணியாளர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2015

வடக்கு மாகாண பொதுச்சேவையில் வெற்றிடமாகவுள்ள அலுவலக பணியாளர் சேவையின் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக உரிய தகைமையுடைய விண்ணப்பதார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **16/11/2015** ஆகும்.

## 02 பொதுவான தகைமைகள்

2.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2.2 விண்ணப்பதாரி வடக்கு மாகாணத்தை நிரந்தரவதிவிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அதாவது இவ் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உள்ள 06 ஆண்டு காலப்பகுதியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும்.

(நேர்முகப்பரீட்சையின் போது வாக்காளர் இடாப்பு மூலம் தனது வதிவிட மாவட்டத்தை நிரூபித்தல் வேண்டும்.)

2.2 சிறந்த தேகாரோக்கியமும் நன்னடத்தையும் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

## 03 பதவிக்கான தகைமைகள்

**3.1 வயதெல்லை:-** விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும், 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே ஓய்வூதியமுடைய நிரந்தர அரச சேவையில் உள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை ஏற்புடையதன்று.

**3.2 கல்வித்தகைமை:-** க.பொ.த(சா/த) பரீட்சையில் இரு தடவைக்கு மேற்படாது மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தலுடன் அவற்றில் குறைந்தது இரு பாடங்களில் திறமைச் சித்திகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

## 04. சம்பள அளவுத்திட்டம் :-

பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (A)ற்கு அமைவாக மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 11,730 – 10 x120 – 10 x130 -10 x145 -12 x160 -17,600/- (PL – 1 – 2006-A)

## 05. பரீட்சையும் பாடத்திட்டமும்

நியமனத்தின் பொருட்டு தகைமை பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையானது பின்வரும் இரு வினாப்பத்திரங்களைக் கொண்டதாயிருக்கும். இப்பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிமூலங்களிலும் நடாத்தப்படும்.

| இல. | பாடம் | காலம் (மணித்தியலம்) | பாடத்திட்டம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடை-வதற்கான புள்ளி |
|---|---|---|---|---|---|
| 01 | உளச்சார்பும் பொதுஅறிவும் | 01 | எண்கள் தொடர்பான திறன், தர்க்க ரீதியான முடிவெடுக்கும் திறன், ஆகியன தொடர்பான அறிவைப் பரிசோதிக்கும் மற்றும் கல்வி, அரசியல், பொருளாதாரம், கலாசாரம், சமூக, விஞ்ஞானம் விளையாட்டு தொடர்பான பொதுஅறிவை பரிசோதிக்கும் வகையிலான 50 வினாக்களை உள்ளடக்கி இருக்கும். | 100 | 40 |
| 02 | மொழித்திறன் | $1^1/_2$ | கடிதம் எழுதுதல், விளங்கிக்கொள்ளும் ஆற்றல், ஒத்தசொல், எதிர்ச்சொல், இலக்கண உபயோகம் ஆகியன தொடர்பான அறிவைப் பரிசோதிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும். | 100 | 40 |

## 06 ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள்

6.1 அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவிகள் நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையனவுமாகும்.

6.2 இவை இடமாற்ற சேவைகளுக்கு உட்பட்டதாகும். இதனால் இந் நியமனம் பெறுபவர்கள் வடக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

## 07 ஆட்சேர்ப்பு முறை

7.1 எழுத்துப் பரீட்சையில் திறமை அடிப்படையிலும், ஆட்சேர்ப்பு நேரத்தில் வலுவிலுள்ள பொது நிர்வாக சுற்றறிக்கைகள், ஆட்சேர்ப்புத் திட்டம், தேசிய மற்றும் மாகாண கொள்கைகள் என்பவற்றிற்கு அமைவாகவும் ஆட்சேர்ப்பு செய்யப்படும். இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் நேர்முகப் பரீட்சையின் போது பரிசீலிக்கப்படும். இதன் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. தேவையான தகைமைகள் இல்லையென தெரிய வந்தால் இப் பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். எழுத்துப் பரீட்சை நடாத்துவது கிடைக்கப் பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். உரிய தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள் என்பனவற்றை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை எழுதுவதற்கான அனுமதி வழங்கப்படும். நியமனத்திற்கான தெரிவின்போது நிரந்தர வதிவிடம் கவனத்திற்கொள்ளப்படும். நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கத்தவறும் சான்றுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

7.2 இவ்விண்ணப்ப முடிவுத்திகதியன்று அல்லது அதற்கு முன் கோரப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பெற்றிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7.3 அலுவலகப் பணியாளர் சேவையின் பதவி வெற்றிடங்களுக்கு 03% மாற்றுத்திறனாளிகளுக்காக (வலது குறைந்தோர்) ஒதுக்கப்படும். பரீட்சார்த்தி நியமனத்திற்காக தெரிவுசெய்யப்படும் போது குறித்த பதவியில் கடமையாற்றுவதற்கு தனது மாற்றுத்திறனானது (வலது குறைவானது) தடையாக அமையாது என்பதனை விசேட மருத்துவப் பரிசோதனை மூலம் நிரூபித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் மருத்துவச் சான்றிதழின்படி உழைக்கும் திறன் குறையும் நூற்றுவீதம் குறிப்பிடுதல் வேண்டும்.

7.4 பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் இது தொடர்பாக தொடர்ந்து வரும் சுற்றறிக்கைகள் என்பனவற்றிற்கமைய சேவையில் இணைந்து 05 வருடங்களுக்குள் குறித்துரைக்கப்பட்ட அரச கரும மொழித் தேர்ச்சி பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

## 08 பரீட்சைக் கட்டணம்

விண்ணப்பதாரி வதியும் வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகமொன்றில் ரூபா 5**00**/-ஐ வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் அவர்களின் **3003** என்ற வைப்பு கணக்கிற்குச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டில் கழராதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

## 09 விண்ணப்பிக்கும் முறை

9.1 இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களிற்கமைவாக A4 அளவிலான (21செ.மீ X 29செ.மீ) தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்தல் வேண்டும். முதலாவது பக்கத்தில் 01 தொடக்கம் 12 வரையான பகுதிகளை உள்ளடக்கி பூர்த்தி செய்த விண்ணப்பத்தை **16.11.2015** திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்."** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

9.2 ஏற்கனவே அரச/மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பித்தால் மட்டுமே அவரது சேவை ஓய்வூதிய நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளப்படும்.

9.3 அனுப்பிவைக்கும் **கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில்** விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைக்குறிப்பிடல் வேண்டும்.

9.4 **சரியாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்**.

9.5 விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்ளல் பயனுள்ளதாகும். விண்ணப்பத்தின் புகைப்படப்பிரதி மற்றும் முன்னோடிப்பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளர் அவர்களினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படலானது விண்ணப்பதாரி சகல தகைமைகளையும் கொண்டுள்ளார் எனக் கருதப்படலாகாது.

9.6 பரீட்சைத் திகதி தொடர்பாக பத்திரிகை மூலம் அறிவித்தலொன்று வழங்கப்படும்.

9.7 விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சைத் திகதிக்கு குறைந்த பட்சம் 03 நாட்களுக்கு முன்னராவது அனுமதி அட்டை கிடைக்காவிடின், அனுமதி அட்டை கிடைக்காமைபற்றி சகல விபரங்களுடன் **"செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அறிவிக்க வேண்டும்.(தொலைபேசி/தொலைநகல் இலக்கம் 021 221 9981).

## 10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை

விண்ணப்பப் பத்திரங்களைப் பூர்த்தி செய்யும் போது மிகக்கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். பரீட்சார்த்தி சமர்ப்பிக்கின்ற ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அவர் மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

## 11. பரீட்சை நிலையம்

பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 01 | வவுனியா | 03 | முல்லைத்தீவு | 05 | சாவகச்சேரி | 07 |
| மன்னார் | 02 | கிளிநொச்சி | 04 | கனகராயன்குளம் | 06 | நெல்லியடி | 08 |

ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**12.** இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத அல்லது விளக்கமற்ற விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

**13.** இப் பரீட்சை நடாத்துதல் அல்லது இரத்து செய்தல் தொடர்பான அதிகாரம் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு உண்டு.

**14.** இந் நியமனங்களை முற்றாக நியமித்தல் அல்லது பகுதியாக நியமித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் தொடர்பான முழு அதிகாரம் நியமன அதிகாரிக்கு உண்டு.

**15.** தமிழ்மொழி, சிங்கள மொழி, உரைகளுக்கிடையிலான ஏதேனும் வேறுபாடு காணப்படின் தமிழ் மொழி உரையே மேலோங்கும்.

**16.** இவ்விளம்பரத்தை வடக்கு மாகாணசபையின் www.np.gov.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

**ரு.வரதலிங்கம்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
**15.10.2015**